**அக்டோபர் - 27**

**"என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது."  - சங் 31 : 15.**

கர்த்தருடைய எல்லா பிரதிஷ்டை செய்திருக்கிற ஊழியக்காரரும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுகிறவர்களானபோது தங்கள் ஜீவனைப் பலியிடுவதற்கு அர்ப்பணம் செய்தார்கள். அவர்கள் தங்களுடைய பிரதிஷ்டையைத் தொடர்ந்து நிறைவேற்றக் கூடுமானால் மாத்திரம் கர்த்தருக்குப் பிரியமான எந்த நிமிஷத்திலும் அவருடைய பராமரிப்பு அனுமதிக்கும் எவ்விதத்திலும், எவ்வழியானாலும் முடிவுக்காகத் தயாராக இருப்பார்கள். பிதா அறியாமலும், அனுமதியாமலும், தங்கள் தலையிலுள்ள ஒரு மயிராவது விழாது என்று கர்த்தருடைய பிரதிஷ்டை செய்திருக்கிற ஜனங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனபாங்கு "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணாதிருப்பேனோ" என்று நம்முடைய பிரிய ரட்சகரால் தெளிவாகச் சொல்லப்பட்டதுவாக இருக்க வேண்டும். "அவர்களுடைய இருதயத்தின் பாஷையும் என்னை நடத்துகிறவர் என் தேவனாயிருக்கிறபடியால் நான் அனுபவிக்கிற என் பங்கு, எதுவாயிருந்தாலும், மனரம்மியமாய் இருக்கிறேன்" என்று கவிஞனால் தெளிவாய் சொல்லப்பட்ட அதுவாயிருக்க வேண்டும்.

**- Z ’04, 237 (R 3407)**

"என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது" என்று கூறுதல் முழு சபைக்கும், அதன் தனிப்பட்ட அங்கத்தினருக்கும் உண்மையானதாயிருக்கிறது. தன்னுடைய ஏற்பாடு சம்பந்தமாகவுள்ள எல்லாக் காரியங்களுக்கும் தேவன் ஒரு ஏற்ற காலத்தை வைத்திருக்கிறார். அதற்கேற்ப சபையின் அனுபவங்களைக் குறிக்கிற அதிசயமான காலத்தின் சிறப்புப் பகுதிகளை நாம் காண்கிறோம். இணையான நேகமங்கள் அநேக விவரங்களில் விசேஷமாக ஒருநாள் கூட சரியான நேரம் அனுஷ்டிக்கப்பட்டதாக நிரூபிக்கின்றன. இந்த விதமாக சபைக்கு சம்பந்தமாயிருக்கிற காலத்தின் சிறப்புப் பகுதிகளில் தேவன் ஒரு பிழையைக்கூட அனுமதிக்கிறதில்லை. சபையின் தனிப்பட்ட அங்கங்கள் சார்பாக இந்த ஒரே மாதிரியான கவலை கொள்ளுகிறார். தன்னை மிகவும் அதிகமாக மகிமைப்படுத்தக்கூடிய சமயத்திலும், அவர்களுக்கு லாபகரமாயிருக்கிற சமயத்திலும், அவர்களுடைய ஒவ்வொரு அனுபவத்திற்காகவும், அடைய வேண்டியவைகளை அடைந்து கொள்ளுவதற்காகவும், வேலைக்காகவும், சிலாக்கியத்திற்காகவும் முன்னேற்பாடு செய்கிறார். **- P ’32, 150.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**கலா 4:5; ரோம 5:6; தானி 9:24-27; 12:11-13; லூக் 23:46; யோவா 13:1; 17:1,2; அப் 1:6; 1தீமோ 2:6; 6:15; 1பேது 2:23; வெளி 6:11; 11:2,3; 14:15.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 230 (R 5508)**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வார அனுபவம் என்ன? அவை எவ்வாறு சரிக்கட்டப்பட்டன? அவற்றின் பலன் என்ன?**